ஈ.டி., சி.பி.ஐ., தேர்தல் ஆணையத்தை வைத்து ஏதாவது செய்யலாம் என பா.ஜ.க. முயற்சி செய்கிறது!

தி.மு.க.வை விமர்சிக்க எடப்பாடிக்கு யோக்கியதை இல்லை!

மதுரையில் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

மதுரை, டிச. 10 - ஈ.டி., சி.பி.ஐ., தேர்தல் ஆணையத்தை வைத்து ஏதாவது செய்யலாம் என பா.ஜ.க. நினைப்பதாகவும் தி.மு.க.வை விமர்சிக்க எடப்பாடி பழனிசாமிக்கு யோக்கியதையும், தகுதியும் இல்லை என தி.மு.க. அமைப்புச்செயலாளர் ஆர். எஸ்.பாரதி காட்டமாக தெரிவித்தார்.

மதுரை பாண்டி கோவில் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வழக்கறிஞர் அணி சார்பில் மதச்சார் பின்மை என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கத்திற்கு தி.மு.க. அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை வகித்து சிறப்புரையாற்றினார்.

தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் ராதா கிருஷ்ணன், சூர்யா வெற்றி கொண்டான், தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, மாநில துணைச்செயலாளர் ராஜா முகமது உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் கோகுல், தேவசேனன், சிவ னேசன் உள்ளிட்டோர் வரவேற்புரை நிகழ்த்தினர்.

மேலும் இந்த கருத்தரங்கில் தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், காங்கிரஸ் கட்சி சார்பில் வழக்கறிஞர் மாரியப்பன், ம.தி.மு.க. சார்பில் வழக்கறிஞர் செந்தில் செல்வன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வழக்கறிஞர் பார்வேந்தன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எஸ்.பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வழக்கறிஞர் கே.கே.சாமி உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர்.

கருத்தரங்கின் போது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம்,

கே.என்.நேரு மீது வழக்குப்பதிவு செய்ய அமலாக்கத்துறை கடிதம் எழுதியது தொடர்பான கேள்விக்கு,

தேர்தலுக்கு இன்னும் 4 மாதங்கள் உள்ள நிலையில் தி.மு.க. அமைச்சர்கள் மீது அமலாக்கத்துறை நெருக்கடி கொடுத்து வருகிறது.

பீகார், கர்நாடகாவில் பா.ஜ.க. அரசு என்ன செய்தார்கள் என்று அனைவருக்கும் தெரியும்.

தி.மு.க. ஆட்சியை சிறப்பாக நடத்தி வருவதால் ஈ.டி., சி.பி.ஐ., தேர்தல் ஆணையம் வைத்து ஏதாவது செய்யலாம் என பா.ஜ.க. முயற்சி செய்கிறது.

எங்களுக்கு மடியில் கனமில்லை வழியில் பயமில்லை, நாங்கள் பா.ஜ.க. அரசை துணிச்சலாக எதிர்க்கிறோம்.

தனது சம்மந்தி வீட்டில் ஈ.டி. சோதனை நடத்திய போது முகத்தை மூடிக் கொண்டு சென்றவர் தானே எடப்பாடி பழனிச்சாமி, தி.மு.க.வை தொட்டுக் கூட பார்க்க முடியாது.

அமலாக்கத்துறை, சி.பி.ஐ., தேர்தல் ஆணையத்தை கையில் வைத்துக் கொண்டு எதையாவது செய்யலாமா என பா.ஜ.க. முயற்சிக்கிறது.

75 ஆண்டுகளில் பல சோதனைகளை கண்ட இயக்கம் தி.மு.க. அமலாக்கத்துறையோ அல்லது சி.பி.ஐ.யோ எந்த விசாரணையை மேற்கொண்டாலும் அதை சந்திக்க தயார். அதனால் எவனுக்கும் யாருக்கும் நாங்கள் பயப்பட மாட்டோம்.

எடப்பாடி பழனிசாமி தன்னுடைய சம்மந்தி வீட்டில் ரெய்டு நடத்தியதும் கார் மாறி மாறி போய் டெல்லிக்கு சென்றுவிட்டு எங்களை பற்றி பேசுகிறார்.

எங்களுக்கு மடியில் கனமில்லாததால் தான் ஒன்றிய அரசை துணிச்சலோடு எதிர்க்கிறோம், நேற்று கூட கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் இதே மதுரையில் ஒன்றிய அரசுக்கு சவால் விட்டு சென்றார்.

ஆனால் பழனிசாமி மகனையும் முக்கிய புள்ளியையும் டெல்லிக்கு அழைத்துக்கொண்டு முகத்தை மூடிக்கொண்டு சென்றார்.

நாங்கள் துணிச்சலோடு, தைரியத்தோடு ஒன்றிய அரசை எதிர்க்கிறோம்.

இதுபோன்ற பிரச்சினைகள் எங்களுக்கு சகஜம். இதையெல்லாம் பார்த்து வளர்ந்தவர்கள் நாங்கள்.

எடப்பாடி பழனிசாமி எங்களை விமர்சனம் செய்து பேசுவதை பார்த்து மக்கள் சிரிக்கத்தான் செய்கிறார்கள்.

எங்களை விமர்சிக்க எடப்பாடி பழனிசாமிக்கு தகுதி யோக்கியதை இல்லை.

மகாராஷ்டிராவில் பா.ஜ.க. என்ன செய்தது எனத்தெரியும். குடும்பத்தை பிரிப்பார்கள். பிரச்சினை ஏற்படுத்துவார்கள். தி.மு.க. வலிமையாக உள்ளதால் எதையாவது செய்யலாம் என முயன்று வருகிறார்கள்.

அடிக்க அடிக்க தான் பந்து உந்தும். அதுபோல வழக்கு போட போட தான் அமைச்சர்கள் உறுதியாக நிற்பார்கள். யாரும் ஓட மாட்டார்கள்.

திருப்பரங்குன்றத்தில் உள்ளூர் மக்கள் அமைதியாக உள்ளார்கள். வெளியே இருந்து சென்று கலவரம் செய்கிறார்கள். மதுரை மண் வரலாற்றுச் சிறப்புமிக்க மண். அந்நியர்களை உள்ளே விடாது. இடம் கொடுக்காது. அதை அறியாதவர்கள் சீண்டிப்பார்க்கிறார்கள்.

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர்கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடந்தது. வழக்கத்தை விட அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். பக்தர்களும் மக்களும் முதல்வர் பின்னால் தான் உள்ளார்கள்.

விஜய் தந்தையோடு திருச்சி வேலுசாமி சந்திப்பு குறித்த கேள்விக்கு,

திருச்சி வேலுச்சாமி கட்சியில் இல்லை என செல்வப்பெருந்தகையே கூறிவிட்டார். அதனால் இல்லாதவரை பற்றி பேச தேவையில்லை.

பிரவின்கார்த்திவிஜயுடன் பேசியது குறித்த கேள்விக்கு,

குடும்பத்தை பிரிப்பார்கள். தமிழ்நாட்டில் கூட அப்பா மகனை இரண்டாகவும், அ.தி.மு.க.வை 4 ஆகவும் பிரித்துள்ளனர். மோடி அமித்ஷா வித்தைகளையெல்லாம் முறியடிக்கும் இயக்கம் தி.மு.க. என தெரிவித்தார்.

மேலும் இந்த கருத்தரங்கில் தி.மு.க. மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு, பொதுக்குழு உறுப்பினர் வைகை பரமன் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வழக்கறிஞர்கள் திரளாக பங்கேற்றனர்.

முதல் நிலை நூலகர்களுக்குப் பதவி உயர்வு!

பள்ளிக் கல்வித்துறை அமைச்சருக்கு நன்றி!

பொது நூலகத்துறை பணியாளர் கழக மாநிலத் தலைவர் ராஜேஷ்குமார் தலைமையில் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, டிச.10

தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழகம் (சி & டி) சார்பாக

நேற்று காலை தமிழக அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழகம் சி மற்றும் டி

மாநிலத் தலைவர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை நேரில் சந்தித்து மாவட்ட நூலக அலுவலர் நியமனம் தொடர்பான கோரிக்கையை வலியுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் அமைச்சர் தலைமையில் பள்ளிக்கல்வித்துறைச் செயலாளர் மற்றும் பொது நூலக இயக்குநருடன் ஆலோசனை நடைபெற்றது.

இந்த ஆலோசனைக்குப் பின் பொது நூலகத் துறை நூலக ஆணைக்குழு பணியாற்றும் நூலகர்களுக்கே மாவட்ட நூலக அலுவலர் பதவி உயர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் செய்தியாளர்களிடம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

இன்றே நம் கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்த அமைச்சர் முன்வந்ததை

நூலகர்கள் சார்பாகவும் தமிழ்நாடு அரசு பொதுநலத்துறை பணியாளர் கழகம் சி மற்றும் டி மாநிலத் தலைவர் ராஜேஷ்குமார், என்றென்றும் அரசு ஊழியர்களின் நலன் காக்கும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கும்,

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் அனைத்து நூலகர்கள் சார்பாகவும் - பொது நூலகத் துறை பணியாளர்கள் கழகம் சி மற்றும் டி சங்கத்தின் சார்பாகவும்

மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

சங்கத்தின் சார்பாகவும், சங்க மாநிலத் தலைவர் சார்பாகவும் அனைத்து நூலர்கள் சார்பாகவும் மீண்டும் ஒருமுறை தமிழக முதல்வர் அவர்களுக்கும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சருக்கும் தங்களின் எங்கள் இதயம் கனிந்த நன்றியினை பொது நூலகத் துறை சி மற்றும் டி பணியாளர் கழக மாநிலத் தலைவர் மு.ராஜேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

படப்பை ஆ. மனோகரன் தலைமை! குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க கிளை கழக செயலாளர்கள் -

கிளை இளைஞர் அணி அமைப்பாளர்கள் அவசர செயற்குழுக் கூட்டம்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், டிச.10- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் நேற்று (09.12.2025 - செவ்வாய்கிழமை) மாலை 04.00 மணியளவில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க கிளை கழக செயலாளர்கள் இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டம் படப்பை சி.என். சி. மஹாலில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் தலைமையில் நடைபெற்றறது.

இக்கூட்டத்தில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறுசிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் சிறப்புரையாற்றினார்.

இதில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. சரஸ்வதி மனோகரன் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி, ஒன்றியக் குழு துணைத் தலைவர் திருமதி உமாமகேஸ்வரிவந்தேமாதரம்

ஒன்றிய கழக பொறுப்புக்குழு உறுப்பினர்கள்

வ.நந்தகோபால், சி.பார்த்தசாரதி மூ.ராஜேந்திரன், எஸ்.கர்ணன் குமுதாசுமன் டி.லோகநாதன் த.ஏழுமலை என்.வாசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், கிளை இளைஞர் அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் டிசம்பர் 14 திருவண்ணாமலை இளைஞர் அணி மண்டல மாநாடு, என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, 2026 தேர்தல் பணி, கழக வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பழனியில் – மூத்த குடிமக்களுக்கான

10-ஆம் கட்ட அறுபடை வீடு ஆன்மிகப் பயணம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

பழனி, டிச.10- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்றுமுன்திம் (08.12.2025) திண்டுக்கல் மாவட்டம், பூம்பாறை குழந்தை வேலப்பர் திருக்கோயிலில் புதிய மூன்று நிலை இராஜகோபுரம் கட்டும் பணிகளையும், சுற்றுச்சுவர், அன்னதானக் கூடம், பக்தர்கள் காத்திருப்புக் கூடம் மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகியவை கட்டப்பட வுள்ள இடங்களையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, பழனி அடிவாரத்தில் 2025-26-ஆம் நிதியாண்டிற்கான அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் 10 ஆம் கட்டப் பயணத்தில் பங்கேற்ற திருச்சி மற்றும் திண்டுக்கல் மண்டலங்களைச் சேர்ந்த 200 மூத்த குடிமக்களுக்கு பயண வழிப்பைகளை வழங்கி, ஆன்மிகப் பயணத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் ஆடிமாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோயில்களுக்கும், அறுபடை வீடுகளுக்கும், இராமேசுவரத்திலிருந்து காசிக்கும் ஆண்டுதோறும் கட்டணமில்லா ஆன்மிகப் பயணங்களை ஏற்பாடு செய்து நடத்துதல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

பூம்பாறை குழந்தை வேலப்பர் திருக்கோயில் திருப்பணிகள் ஆய்வு

பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபக்கோயிலான பூம்பாறை, குழந்தை வேலப்பர் திருக்கோயிலில் ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் புதிய மூன்று நிலை இராஜகோபுரம் கட்டும் நடைபெற்று வருகிறது. மேலும் இத்திருக்கோயிலில் ரூ.1.63 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் மற்றும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அன்னதானக் கூடம், பக்தர்கள் காத்திருப்பு கூடம், அலுவலகக் கட்டடம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இப்பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு செய்து பணிகளை விரைவாக மேற்கொண்டு, முடித்திட அறிவுரைகளை வழங்கினார்.

அறுபடை வீடு ஆன்மிகப் பயணம் 10ஆம் கட்ட பயணம் தொடக்கம்

2025-26-ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், ரூ.2.50 கோடி அரசு நிதியில் அறுபடை வீடுகளுக்கு 2,000 மூத்த குடிமக்கள் கட்டணமின்றி ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்படுவர் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, அறுபடை வீடுகளுக்கான முதற் கட்ட ஆன்மிகப் பயணம் கடந்த 26.08.2025 அன்று சென்னை கந்தகோட்டத்தில் 200 மூத்த குடிமக்களுடன் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து மண்டலங்களிலிந்தும் மூத்த குடிமக்கள் ஆன்மிகப் பயணமாக திருத்தணி, சுவாமிமலை, திருப் பரங்குன்றம், சோலைமலை, பழனி, திருச்செந்தூர் ஆகிய அறுபடை வீடுகளுக்கு கட்டணமில்லாமல் அழைத்து செல்லப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று (08.12.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறுபடை வீடு ஆன்மிக பயணத்தின் நிறைவாக, 10வது கட்டப் பயணத்தில் பங்கேற்ற திருச்சி மற்றும் திண்டுக்கல் மண்டலங்களைச் சேர்ந்த 200 மூத்த குடிமக்களுக்கு பயண வழிப்பைகளை வழங்கி, பயணத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், இணை ஆணையர்கள் கார்த்திக், செ.மாரிமுத்து, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் கே.எம்.சுப்பிரமணியன் மற்றும் அறங்காவலர்கள், துணை ஆணையர் வெங்கடேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மணிமாறன் தென்றல் ஏற்பாடு! தளபதி முருகேசன்-கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன்-இரா.நவநீத கிருஷ்ணன் பங்கேற்பு!

பொள்ளாச்சியில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா - கருத்தரங்கம்!

வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வாழ்த்துரை-தி.செந்தில்வேல்-சே.மெ.மதிவதனி கருத்துரை!

பொள்ளாச்சி, டிச.10- கழக இளைஞர்அணிச் செயலாளர்துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மாபெரும் கருத்தரங்கம் 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மீனாட்சி மகால், மகாலிங்கபுரம், ரவுண்டானா, பொள்ளாச்சியில் நடைபெறுகின்றது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறும் இக் கருத்தரங்கில் திராவிடம் 2.0 ஏன்? எதற்கு...? வெல்லட்டும் திராவிடம், வீழட்டும் பாசிசம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றனர்.

கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ். சபரிகார்த்திகேயன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொள்ளாச்சி வடக்கு நகர செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன், தெற்கு நகர செயலாளர் எம்.அமுதபாரதி, பா. திருமலை ராஜா, வி.ஆர். நிஷாந்த், கே.சபரி கிருஷ்ணன், சல்மான் நாசர், ச.புவனேஷ், இருகூர் உதயபூபதி, வி.யுவராஜ், பொள்ளாச்சி நவீன், பட்டாள் மணிகண்டன், சபரி முத்துவீரன், பாண்டிதுரை, பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கருத்தரங்கில் மேற்கு மண்டல பொறுப்பாளர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வாழ்த்துரை வழங்குகிறார்.

திராவிடம் 2.0 ஏன்?எதற்கு..? என்று தலைப்பில் மூத்த ஊடகவியலாளர் தி.செந்தில் வேல், வெல்லட்டும் திராவிடம் வீழட்டும் பாசிசம் என்ற தலைப்பில் திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் சே.மெ.மதிவதனி ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியை தலைமைக் கழக இளம் பேச்சாளர் ச.பூங்கொடி தொகுத்து வழங்குகிறார்.

கத்தரங்கை கே.இ. பிரகாஷ், எம்.பி., கே.ஈஸ்வரசாமி எம்.பி., கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், கழக சட்ட திட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இதில் டாக்டர் ஆர்.மகேந்திரன், இரா.தமிழ்மணி, திப்பம்பட்டி வே.ஆறுச்சாமி, கே.எம்.நாகராஜ், ஜி.ஏ.அதிபதி, டாக்டர் கி.வரதராஜ்,, பி.ஏ.செந்தில்குமார், கே.வி.ஆறுமுகம், தனம்தங்கதுரை, விஜயகுமார், அரவிந்த் வசந்தராம் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், பொள்ளாச்சி நகர நிர்வாகிகள்,

நகராட்சி பேரூராட்சி தலைவர்கள், கோவை தெற்கு மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் கழக அணி தலைவர், துணைத் தலைவர்,அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பொள்ளாச்சி நகர் மன்ற உறுப்பினர்கள், பொள்ளாச்சி நகர வட்டக் கழகச் செயலாளர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக, ஒன்றிய, நகர,பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், நகரக் கழக முன்னணி யினர், நகர மாணவரணியினர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்புக் குழுவினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக பொள்ளாச்சி நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ஈஸ்வரன் நன்றி கூறுகிறார்.

மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்!

பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதி திமுக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை – இ.எஸ். பெர்னார்ட் அறிக்கை!

பல்லாவரம், டிச. 10 - பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் வடக்கு பகுதி மற்றும் தெற்கு பகுதி திமுக சார்பாக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 10- 12 -2025 புதன்கிழமை மாலை 5..00 மணி அளவில் குரோம்பேட்டை ஜி.எஸ்.டி ரோட்டில் அமைந்துள்ள ஆனந்தா திருமண மண்டபத்தில் எங்களது தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் வரவேற்பு உரையில் பகுதி கழக நிர்வாகிகள் இரா. சேகர், வை.த. ரா. மூர்த்தி ச. சிவக்குமார் வ. முத்து பி. அம்பிகா எஸ். நெடுஞ்செழியன் எம். சி., கே. கர்னல் ஈ. வெங்கடேசன் பி. மீனா ஆர். செந்தில்குமார் பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் சரத் வெங்கடேசன் எஸ். சாகுல் அமீது ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்று ஒவ்வொருவரும் தங்கள் வாக்குச்சாவடிகள் வெற்றி வாக்குச்சாவடிகளாக மாற்ற இரவு பகல் பாராமல் உழைக்க வேண்டும் என்று நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின்வேண்டுகோளின் படியும் இளைஞர்களின் பட்டாளம் எப்பொழுதுமே கழகத்தின் பக்கம் தான் என்பதை நிரூபிக்கும் வகையில் நமது இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திருவண்ணாமலையில் நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டில் நமது இரண்டு பகுதியில் இருந்து இளைஞர் அணி நிர்வாகிகள் எவ்வாறு பங்கேற்பது என்பது குறித்தும் நமது சட்டமன்ற உறுப்பினர் பல்லாவரம் தொகுதியில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் பேருந்துகளை அனுப்பி கழகத் தோழர்களை அழைத்துச் செல்லவும் அவர்கள் பேருந்தில் மாநாட்டிற்கு வரும் வழியில் கழகத் தோழர்கள் திருவண்ணாமலையில் தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்து ஓய்வெடுத்து உணவு ஏற்பாடு செய்யப்பட்டு உணவு அருந்தி செல்வதற்கும் நமது பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு இளைஞர் அணி நிர்வாகிகள் எவ்வாறு பேருந்து ஏறி எவ்வாறு வருவது மண்டபத்திற்கு வருகை தந்து மண்டபத்தில் உணவு அருந்த செல்வது மற்றும் மாநாட்டில் கட்டுப்பாடுடன் பங்கேற்பது குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்.

எனவே அப்பொழுது பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட இளைஞரணி செயலாளர்கள் வட்ட இளைஞரணி நிர்வாகிகள் பாக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இக்கோட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம இவ்வாறு பகுதி கழகச் செயலாளர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை இ. எஸ். பெர்னார்ட் ஆகியோர் வேண்டுகோள் விடுத்து அறிக்கை அளித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசுபொது நூலகத்துறை மாவட்ட நூலக ஆணைக் குழுவில் பணிபுரியும் முதல் நிலை நூலகர்களை மாவட்ட நூலக அலுவலராக பதிவு உயர்வு வழங்கப்படும் என அறிவித்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கும், அரசு ஊழியர்களின் நலன் காக்கும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசு பொதுநூலகத் துறை பணியாளர் கழகம் சிஎன் டி யின் சார்பாகவும் நூலகர்களின் சார்பாகவும் அதன் தலைவர் ராஜேஷ்குமார் தலைமையில் – சங்க நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.